<u>**சுருக்கம்**</u>

மாற்றுத் திறனாளிகள் நலன்– அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளும் அரசுப் போக்குவரத்து கழக பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் பயணம் செய்ய சலுகை மற்றும் மாற்றுத் திறனாளிகள் மாணவ / மாணவிகள், மற்றும் வேலைக்கு செல்லும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு பேருந்தில் இலவச பயணச் சலுகை வழங்குதல்–2009–2010 மற்றும் 2010–2011 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை– நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை

அரசாண(நிலை) எண்.15

நாள்:20–03–2014
விஜய, பங்குனி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண்.19, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 31–03–2011.
2. அரசாணை(நிலை) எண்.07, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 20–01–2012.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.4534/இவாததி–1/2013, நாள் 11.10.13

––––––

<u>**ஆணை**</u>:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளும் அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் (75% concession) பயணம் செய்ய சலுகை வழங்கும் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மாணவ / மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்லும் மாற்றுத் திறனாளிகளுக்கு பேருந்தில் இலவச பயணச் சலுகை வழங்கும் திட்டத்தினை, 2010–2011 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த அனுமதியளித்தும் மற்றும் மேற்படி திட்டத்தின் கீழ், 2009–10 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் தொடர்பான செலவினங்களுக்கென ரூ.7,08,21,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2010–11ம் நிதியாண்டில் பணிபுரியும், கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகள் மேற்கொண்ட 75% இலவச பயணச் சலுகை வழங்கும் திட்டத்திற்கு ரூ.7,08,21,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தமது கருத்துருவில், 2009–10 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட பயணங்களில் அடிப்படையில் செலவினத் தொகையாக ரூ.10,22,71,399/– கோரியதற்கு, ரூ.7,08,21,000/– மட்டுமே நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது என்றும், அவ்வாறாக, 2010–11 ம் நிதியாண்டில், கோரப்பட்ட செலவினத் தொகை ரூ.12,28,64,043/–ல் ரூ.7,08,21,000/– மட்டுமே நிதி ஒப்பளிப்பு வழங்கியதால், மேற்படி ஆண்டுகளில், நிலுவையாக உள்ள ரூ.8,34,93,442/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, 2009–10 மற்றும் 2010–11 ஆம் நிதியாண்டிற்கான பணிபுரிவோர் / கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பேருந்து பயணச் சலுகை கட்டணத்தை, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க ஏதுவாக, 2009–10 ஆம் ஆண்டிற்கென நிலுவைத் தொகையாக உள்ள ரூ.3,14,50,399/–ம், 2010–11 ஆம் ஆண்டிற்கென நிலுவை தொகையாக உள்ள ரூ.5,20,43,043/– என மொத்தம் ரூ.8,34,93,442/– (ரூபாய் எட்டு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது BG– மாற்றுத் திறனாளிகளுக்கு பயணச் சலுகை–42–பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்.
(த.தொ.கு. 2235–02–101–BG-4206)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று உரிய ஒப்புகையின் பேரில் சம்பந்தப்பட்ட போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். மேலும் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்படும் தொகை அரசாணை(நிலை) எண்.233, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 03–12–2007ல் ஆணையிடப்பட்ட நெறிமுறைகளின்படி கணக்கிடப்பட்டுள்ளது என்ற சான்றிதழை (Specific certificate) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர்களிடமிருந்து தவறாமல் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்கும்படியும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.14771/நிதி(சந)/14, நாள்18.03.2014–ன்படி அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர்கள்.(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைமைக் கணக்காயர், சென்னை–1.5
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:-**
போக்குவரத்துத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.